சாட்சியம் Kumarasamy Tharmaseelan — Committee of Inquiry 21 Oct. 2017 — கிளிநொச்சி வளாகத்திலுள்ள மரங்களை வெட்டியது தொடர்பாக.
இடம் — கிளிநொச்சி வளாகம்

விசாரணை நடைபெற்ற திகதி — 21.10.2017.

விசாரணை நடந்த இடம் — பொதுநிர்வாக அலுவலகம், கிளிநொச்சி வளாகம்

விசாரணை நடந்த நேரம் — மு.ப - 12.40 — 14.45 வரை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் இடம்பெற்ற மரங்களை வெட்டியது தொடர்பாக 21.10.2017ல் திகதி மேற்கொள்ளப்பட்ட நிர்வாக விசாரணையின் போது கவனிப்பாளர் (பல்கலைக்கழக [illegible]) - கிளிநொச்சி வளா அவரால் தெரிவிக்கப்பட்டவை.

பெயர் — திரு. குமாரசாமி தர்மசீலன்
தே.அ.அ.இல — 920114105V
முகவரி — யூனியன்குளம், கோணாவில், கிளிநொச்சி
சமயம் — இந்துசமயம்.
நியமனத் திகதி — 2014-07-31 (தற்காலிகம்)
— 2017-05-02. (நிரந்தரம்)
மோட்டார் வாகன இல — XR 6831

1. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் காணப்படும் வெற்றிடங்களுக்கான நியமனம் ஏ.ம.ஏ.ம அலுவலகம் மூலம் நடைபெறுகின்றது என்பது பற்றி கிளிநொச்சி வளாகத்தில் பணிபுரிந்த திரு. N. சுதர்சன் (மேற்பார்வையாளர்) அவர்கள் எனது சகோதரிக்கு தெரியப்படுத்தியதன் மூலம் ஏ.ம.ஏ.ம அலுவலகத்திற்கு எனது விபரங்களைக் கொடுப்பதற்காக சென்றேன்.

2. குறித்த தினத்தில் (30-07-2014) ஏ.ம.ஏ.ம அலுவலகத்தில் சந்திப் அமைப்பாளராக இருந்த திரு. தவநாதன் அவர்களை [illegible] காரணத்தினால் நான் திரு. N. சுதர்சன் அவர்களை தொடர்பு கொண்ட போது (தொலைபேசி மூலம்) அவர் ஏ.ம.ஏ அலுவலகத்திற்கு அழைத்து வந்தார். அதன் பின் தவநாதன் அவர்களை சந்தித்து எனது விபரங்களை கொடுத்த பின் அவர் என்னை நாளை (31-07-2014) கிளிநொச்சி வளாகத்தில் பணிக்குச் செல்லுமாறு கூறினார்.

3 மறுநாள் (31-07-2014) அன்று வளாகத்தின் பிரதிப் பதிவா (Deputy Registrar) மற்றும் பொறியியல் பீடாதிபதி (Engineering Faculty Dean) இருவரையும் சந்தித்த

அவர்கள் பராமரிப்பின் நிலையில் உள்ள வளாகத்தி
வருகின்றார் வருகைக்கு செல்லும்படி கூறப்பட்டு அவர்களை
அங்கு வந்தனர்.

4. கவனிப்பாளராக பணிக்கு சேர்ந்த பின்னர் பணி மற்றும் ஓய்வு தினங்களில் வளாகத்தினுள் தங்கியிராத சந்தர்ப்பம் என்றால் நான் வெளியில் நிற்பேன். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பகுதிநேர வேலையாக தச்சு வேலை மற்றும் விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவேன்.

5. மேற்பார்வையாளர் சுதர்சன் அவர்கள் வளாகத்தில் நாட்டப்படும் மரங்களை தறிப்பதற்கு வேலையாட்களை ஒழுங்குப தரும்படி கோரியதனால் எனக்குத் தெரிந்த நபர் மூலம் மரம் அரிபவர்களை தொடர்பு கொண்டு அவர்களை வளாகத்திற்கு எனது மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி மூலம் அழைத்து வந்து அவர்களை சுதர்சனுடன் இருந்த வளாகத்தில் தொடர்புபடுத்தியபின் சுதர்சன் அவர்கள் வெட்டப்பட வேண்டிய மரங்களை அடையாளப்படுத்தும் போதும் அவர்கள் மரங்களை துண்டுகளாக (4 x 3 அடி) வெட்டும் போதும் அங்கு நின்றதோடு அவர்களுக்கான உணவு மற்றும் போக்குவரத்து ஒழுங்குகளையும் செய்து கொடுத்துள்ளேன்.

6. எனது மேற்பார்வையாளராக N. சுதர்சன் அவர்கள் இருந்த காரணத்தினால் அவரால் பணிக்கப்பட்ட பணிகளை மறுப்பின்றி செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டது.

7. மேற்பார்வையாளராக இருந்த திரு. N. சுதர்சன் அவர்களுக்கு எ அக்காவுடன் இருந்த காதல் நான் பணிக்கு வந்த பின்னர் எனக்குத் தெரிய வந்தது. அவர்களது திருமணம் 21-05-2016 அன்று நடைபெற்றது.

மேற்கூறப்பட்ட விடயங்களை முழுமையாக வாசித்து விளங்கிக்கொண்டு நான் கையொப்பமிடுகிறேன். 21/10/2017
920114105V